https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# எழுத்துச் சாரியைகள்

**முனைவர் ஆ. பாக்கியலட்சுமி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஜெயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருநின்றவூர்.

## ஆய்வுச்சுருக்கம்

இலக்கணக்கூறுகளில் இன்றியமையாத கூறாகளில் சாரியையும் ஒன்றாகும் — இலக்கணிகள் கூறும் சாரியை என்ற காரணப்பெயர் — சாரியை என்பதற்கான விளக்கம் –ஆய்வாளர் தெ.பொ.மீனாட்சிசுந்தரம் கூறும் கருத்து அரணாவது — இலக்கணிகள் சாரியை பற்றிப் பேசும் இடங்கள் — சாரியையின் வகைகள் – எழுத்துச்சாரியைகள் — உரையாசிரியர்களின் கருத்துரை — இலக்கணவியலாரின் சாரியைக் கோட்பாடு —இலக்கணக்கொத்து, நன்னூல், தென்னூல், இலக்கணவிளக்கம், முத்துவீரியம் – அறுவகைஇலக்கணம், ஏழாம் இலக்கணம், தமிழ்நூல், தமிழ்க்காப்புஇயம் முதலிய இலக்கண நூல்கள் உரைக்கும் எழுத்துச்சாரியைக் கோட்பாடு – தற்கால இலக்கண வரலாற்றில் எழுத்துச்சாரியைகளின் வளர்ச்சி.

## எழுத்துச் சாரியைகள்

மனிதனின் வாழ்வியல் கூறுகளில் மொழியும் ஒரு கூறு எனலாம். அவ்வாறே மொழி வாழ்விற்கு இன்றியமையாதவை இலக்கணக் கோட்பாடுகளாகும். இவ்வாறு அமையப் பெற்ற இலக்கணக்கூறுகளில் இன்றியமையாத கூறாகத் திகழ்வதில் சாரியையும் ஒன்றாகும்.

## சாரியை இலக்கணம்

சாரியை என்பதற்கு இலக்கணிகள் சாரி + இயை = சாரியை என்று காரணப்பெயர் ஆனது என்கின்றனர். சாரியை என்பதற்கான விளக்கத்தை இளம்பூரணர் கூறவில்லை. நச்சினார்க்கினியர் சாரியை பிரித்துக் காட்டிச் "சாரியை என்றதன் பொருள் வேறாகி நின்ற இருமொழியும் தம்மில் சார்தல் பொருட்டு இயைந்து நின்றது என்றவாறு…"[1] என்று விளக்குகிறார். அவர் கருத்துப்படி; பெயரையும் உருபையும் புணர்க்கச் செய்வது, பெயரும் உருபும் இயைய உடன் நிற்பது சாரியை ஆகும். இதனைச் சாரியை வரும் இடம் நோக்க உணரலாம்.

சாரியை, "ஆங்கிலத்தில் Augment, Increment, Inflexional Increment என்று குறிப்பிடுகின்றனர். இதனுடைய சிக்கலான தன்மை காரணமாக இது 'So Called' என்ற அடையுடன் சேர்த்தும் வழங்கப்படுகிறது."[2] என்று 'The So-Called Inflexional Increments In Tamil' என்ற கட்டுரையில் தெ.பொ.மீனாட்சிசுந்தரம் குறிப்பிடுகிறார்.

## இலக்கணக்கொத்து

இலக்கணக்கொத்து, சாரியை குறித்து,

"ஒரெழுத் திற்கே ஒருசா ரியையும்
ஒரெழுத் திற்கே பலசா ரியையும்
பலஎழுத் திற்கே ஒருசா ரியையும்

**தொடர்ந்தபல் லெழுத்திற்கு ஒருசா ரியையும்
சாரியை இன்றித் தனித்தும் தொடர்ந்தும்,
தொடர்பினுள் சாரியை கலந்து தோன்றியும்,
வரும்என மொழிப வழக்கறிந் தோரே"[3]**

என்று உரைக்கிறது. இதில் ஓர் எழுத்திற்கு ஒரு சாரியையும் பல சாரியையும், பல எழுத்திற்கு ஒருசாரியையும், தொடர்ந்து பல எழுத்திற்கு ஒருசாரியையும், சாரியை இன்றித் தனித்தும் தொடர்ந்தும் தொடர்புடன் கலந்து வருவது சாரியை தோன்றும் நிலையென்று தமிழ்மொழி வழக்கறிந்தவர் அறிவரென்று உணர்த்துகிறது. பெயரிலும் வினையிலும் வருகின்ற சாரியை களைத் தவிர உயிரெழுத்துக்களையும் மெய்யெழுத்துக் களையும் சுட்டிக் கூறும் போது பயன்படும் சிலகிளவிகளையும் மரபிலக்கணநூலார் சாரியை என்றே குறிக்கின்றனர்.

தொல்காப்பியம் சாரியைப் புணர்ச்சியிலும், நன்னூல் உருபுப்புணரியலிலும், இலக்கண விளக்கம் உயிரீற்றுப் புணரியலிலும், தொன்னூல் விளக்கம் சொற்பொதுவியலி லும், சுவாமிநாதம் பதமரபியலிலும், முத்து வீரியம் புணரியலிலும், அறுவகைஇலக்கணம் சொல்லிலக்கணச் சார்பியல் மற்றும் திரிபியலிலும், தமிழ்நூல் உறுப்பியலிலும், தென்னூல் கிளவியியலிலும், தமிழ்க்காப்பு இயம் சொற்புணர்ச்சி இலக்கணத்திலும் சாரியை பற்றிய செய்திகளைப் பேசுகின்றன. வீரசோழியத்திலும் நேமிநாதத்திலும் சாரியை குறித்த கருத்துகள் காணக்கிடைக்கப் பெறவில்லை.

## சாரியையின் வகைகள்

தொல்காப்பியர் சாரியைகளை இரண்டு வகையாகக் கொண்டார். ஒன்று எழுத்துக் களைக் குறிப்பிட எழுத்தொடு இணைத்து வழங்கப் பெறும் எழுத்துச்சாரியைகள், மற்றொன்று புணரியல் நிலையிடைப் பொருணிலைக்கு உதவுவனவாகச் சொற் களின் இடையில் வருகின்ற சாரியைகள் என்பனவாம். எழுத்துக்களைக் ஒலித்திடப் பயன்படும் எழுத்துச்சாரியைகள் பற்றி இலக்கணிகள் கூறும் கருத்துக்கள் மட்டும் ஆய்வு எல்லையாகக் கொண்டு இங்கு ஆராயப் படுகின்றன.

## எழுத்துச்சாரியைகள்

தொல்காப்பியர் காரம், கரம், கான் என்ற மூன்றனையும் எழுத்துச்சாரியைகளாகப் புணரியலில்,

"காரமும் கரமும் கானொடு சிவணி
நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை"[4]

என்று சுட்டுகிறார். இவற்றுள் நெட்டெழு த்துகள் 'காரம்' என்ற சாரியை பெறும் என்பதை,

**"அவற்றுள்
கரமும் கானும் நெட்டெழுத்து இலவே"[5]**

என்றும் குற்றெழுத்துகள் மூன்று சாரியை களையும் பெறும் என்பதனை,

**"வரன்முறை மூன்றும் குற்றெழுத்து உடைய"[6]**

என்றும் ஐகாரம், ஔகாரம் இரண்டும் 'கான்' சாரியை பெறும் என்பதனை,

**"ஐகாரம் ஔகாரம் கானொடும்
தோன்றும்"[7]**

என்றும் தனிமெய்கள் அகரச் சாரியை பெறும் என்பதனை,

**"மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்"[8]**

என்றும் உரைகின்றார்.

## உரையாசிரியர்கள் கருத்துரை

தொல்காப்பியம் சுட்டும் இச்சாரியைகள் மட்டுமின்றி உரையாசிரியர்கள் மேலும் சில எழுத்துகளைத் தம் உரைகளில் கூறுகின்ற னர். 'நேரத்தோன்றும்' என்று தொல்காப்பியம் சுட்டுவதால் நேரத்தோன்றாத சாரியைகள் என **"ஆனம், ஏனம், ஓனம்"[9]** என்பனவற் றையும் சேர்த்து இளம்பூரணர் குறிப்பிடுகி றார். இதனை நச்சினார்க்கினியரும்[10] ஏற்கிறார். இவர்களிருவரும் கூறும் மூன்று சாரியைகள் மட்டுமின்றிக் காரைச்சாரியை யும் சேர்த்துப் பி.சா.சுப்பிரமணியசாஸ்தி ரியார்[11] எடுத்துரைக்கிறார். "கரம், கான், அகரம், ஏனம் பிறவும் எழுத்தின் சாரியை"[12] என்று பிங்கலநிகண்டு கூறுகின்றது.

'நேரத்தோன்றாதன' என உரையாசிரியர்கள் கூறுவதை இழிவழக்கு என்கிறார். ச.பால சுந்தரனார் இதனை, "இனி ஆய்தத்தை அஃகு என்னும் ஒலிப்பாக நிறுத்தி, ஏனம் என்றும் சொல்லைக் கூட்டி 'அக்கேனம்' என வழங்கும் வழக்குநோக்கி இது போன்றவை நேரத்தோன்றாதன எனப் புலப் படுத்துவார். 'நேரத்தோன்றும்' என்றார், ஆனம், ஓனம் என்பவை நேரத்தோன்றா எழுத்துச்சாரியைகள் என்பார் உரையாளர். அவை இருவகை வழக்கினும் காணப் பெறாமையான், அவர் வரிவடிவைச் சுட்டி ஆனா, ஆவன்னா என வழங்கும் வழக்கு

நோக்கிக் கூறினாற் போலும். அவ்வழக்குச் சிறார்க்கு வரிவடிவைப் பயிற்றும் இளம் பாலாசிரியன்மார் கூறும் 'அ' அன்ன எழுத்து 'ஆ' அன்ன 'இ' அன்ன 'ஐ' அன்ன என்னும் உவமச்சொல்லின் மரூஉவாகிய இழிவென்க"[13] என்பது அவர் கூறும் உரைவழியாகக் காணக்கிடைக்கிறது.

## இலக்கணவியலாரின் சாரியைக் கோட்பாடு

### நன்னூல்

தொல்காப்பியம் கூறிய சாரியை தொகுத்து ஒரே நூற்பாவில் ,

**"மெய்கள் அகரமும் நெட்டியிர் காரமும்**
**ஐயௌக் கானும் இருமைக் குறிலிவ்**
**இரண்டொடு கரமுமாஞ் சாரியை பெறும்**
**பிற"[14]**

என்று பவணந்தியார் குறிப்பிடுகிறார். இந்நூற்பா உரையில் "மெய்களை முற் கூறினார். அவற்றிற்கு அகரச் சாரியை இன்றியமையாகையின், மெய்கள் அவ்வு மென்னாது அகரமும் என்றார். அங்ஙனம் கரம், காரம், கான்கள் வரின் சாரியை அகரத்தினது சாரியை என்று கோடற்கு, ஆம் சாரியை என்றார். காரம் முதலிய சாரியைகளை ஏற்ற பெற்றிக் கோடற்கு…. முடிந்தது முடித்தல் என்னும் உத்தி"[15] என்று சங்கரநமச்சிவாயர் இதற்கு உரைவிளக்கம் அளிக்கிறார்.

"தனி மெய்களுக்கு 'அ' என்னாது அகரம் அதன் சாரியையாகும் என்றதனால் அகர உயிர் பெறற்குரிய சாரியைகள் அனைத் தையும் 'அ' பெற்ற மெய்களும் பெறும் என்பர். மேலும், 'பிற என்ற மிகையானே, தனியே வருதலில்லாத ஆய்தம், முன்னே 'அ' என்னும் சாரியையும், பின்னே 'கேனம்' என்னும் சாரியையும் பெறும் என்றும் கொள்க என்பதோடு, உயிர்மெய் நெடில்கள் சாரியை பெறாமல் கா, கொ எனவோ ககர ஆகாரம், ககர ஓகாரம் எனவிவ்வாறோ வரும் எனவும் கொள்க"[16] என்று மேற்சொன்ன நன்னூல் நூற்பாவிற்கு மோசசு.பொன்னையா விளக்கம் தருகிறார்.

### தென்னூல்

தென்னூல் ஆசிரியரும் தொல்காப்பிய உரையாசிரியருமான ச.பாலசுந்தரனார் நன்னூல் திறனாய்வுரையில், "தனிஎழுத்தைக் கூறுமிடத்து மெய்கள் அகரச்சாரியையும் நெட்டுயிர் எழுத்துக்கள் காரச்சாரியையும் ஐ, ஔ இரண்டும் அவ்வொற்றொடு 'கான்' என்னும் சாரியையும் உயிர்க்குறில் இருவகைகளும் காரம், கான் என்பவற்றோடு கரம் என்னும் சாரியையும் பெற்று வரும். விளக்கம் மெய்களைக் கூறுமிடத்து மகரம், மஃகான் என வரும். இவற்றுள் 'அ' மட்டுமே மெய்க்குரிய சாரியை. கரம் கான் என்பவை 'அ' என்னும் உயிருக்குரிய சாரியைகளாம். இவற்றுள் மெய் தவிர்த்தவை வேண்டுமிடத்துச் சாரியை இன்றியும் வரும். உயிர்மெய் நெட்டெழுத்துகள் சாரியை பெறா. மா-மை என்பனவற்றைக் கூறுமிடத்து மகர ஆகாரம் மகர ஐகாரம் எனப்பிரித்துக் கூறுதல் மரபாகும். இச்சூத்திரம் முடிந்தது முடித்தல் என்னும் உத்தியாகும்"17 என்று விளக்குகிறார். இவரே தென்னூலில் சாரியை குறித்து,

**"அவ்வும் கரமும் காரமும் கானும்**
**செவ்விய எழுத்துச் சாரியை ஆகும்"[18]**

என்று குறிப்பிடுவதொடு, ஆனா, ஆவன்னா என்பனவற்றுள் வரும் னா, வன்னா, ஏனம் என்பவை சாரியை அல்ல. மரூஉச்சொல் என்பதை,

**"வரிவடிவெழுதப் பயிற்றுங்காலை**
**அ அன்ன ஆ அன்ன அஃஅன்ன என்று**
**சுட்டிய உவமச்சொல் னா வன்னா**
**என மருவின அவை சாரியை அலவே"[19]**

என்ற உரைச்சூத்திரத்தில் குறிப்பிடுகிறார்.

### இலக்கணவிளக்கம்

தொல்காப்பியம், நன்னூல் கருத்துக்களை வாங்கி இலக்கணவிளக்கம் உயிர்க்குறிலொடு உயிர்மெய்க்குறிலும் மெய்களும் காரம், கான்களுடன் கரமும் பெற்று நடக்கும் என்பதை,

**"நெட்டுயிர் காரமு மையெக் கானு**
**மிருமைக் குறிலொற் றிவற்றோடு ககரமுமா**
**மின்ன சாரியை பெறூஉ மெம்வழி யானு**
**மெய்யி னியக்க மகரமொடு சிவணும்"[20]**

என்ற நூற்பாவில் உணர்த்துகிறது.

### முத்துவீரியம்

நெட்டெழுத்துகள் காரச் சாரியை பெறும். அவற்றுள் ஐயும் ஔவும் காரச் சாரியை களோடு கான் சாரியையும் பெறும், உயிர்க் குறிலும் உயிர்மெய்க்குறிலும் காரம், கான், கரம் ஆகிய முச்சாரியைகளையும் பெறும் என்பதனை,

"நெட்டெழுத் தெல்லாங் காரமொடு
நிலையும்"[21]
"அவற்றுள்,
ஐ, ஔக்கானு மடையவும் பெறுமே"[22]
"காரங் கான்கரம் பெறுமிரு மைக்குறில்"[23]
என்று முத்துவீரிய நூற்பாக்கள் உரைக்கிறது.

### சுவாமிநாதம்

"அகரம், கான், கரம், காரம்"[24] ஆகிய நான்கும் எழுத்துச் சாரியைகளாகப் பயன்படுமென்று சுவாமிநாதம் கூறுகின்றது. ஏனைய எழுத்துச் சாரியைகள் குறித்துக் குறிப்பிடவில்லை.

### அறுவகை இலக்கணம் / ஏழாம் இலக்கணம்

அறுவகை இலக்கணத்தில் எழுத்துக்கள் பெறும் சாரியை குறித்து வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் எதுவும் குறிப்பிடவில்லை. எனினும் அவர் இன், கான் ஆகியவற்றை எழுத்துச்சாரியையாகக் கொண்டார் என்பதைப்,

**"பலவின் எனும் சொல் பலவற்றின் என
வருதலும், அஃகான் வஃகான் என்னல்
ஆதிய எழுத்துச் சாரியைப் பகுதியும்
அவ் உவ் ஆகிய பிறவும் சீரியர்
வைப்புழி உணர்ந்து வழங்குதல் முறையே"[25]**
என்ற ஏழாம் இலக்கணநூற்பாவழி உணரலாம்.

### தமிழ்நூல்

எழுத்துகளைத் தனித்து ஒலிக்கும்போது; மெய்யை அகரத்தொடு சேர்த்து ஒலிக்க வேண்டும். என்பதனொடு உயிர்க்குறில், உயிர்மெய்க்குறில்களைக் 'கரம்' சேர்த்தும் உயிர்நெடில், உயிர்மெய் நெடில்களைக் 'காரம்' சேர்த்தும் ஒலித்தல் வேண்டும். ஆய்தத்தை ஒலிக்கும்போது அதன்முன் அகரத்தையும் அதன்பின் ஆனம், ஏனம் என்ற குறியீட்டொடு மெய்யும் சேர்த்தும் ஒலிக்க வேண்டும் என்பதை,

"எழுத்தினைத் தனித்துக் குறித்திடல்
வேண்டின்
மெய்ம்மேல் அவ்வும் அத்தொடு கரமும்
உயிர்மெய் உயிர்க்குறில் இரண்டும் கரமும்
நெடில்கள் காரமும் எழுத்துச் சாரியை"[26]
"முன்னர் அகரம்வைத்[து] ஆய்தம் தன்னைப்
பின்னர் ஆனம் ஏனம் சேர்க்க
நண்ணும் கவ்வொடு நன்கொலி செயலே"[27]
என்ற நூற்பாக்கள்வழி தமிழ்நூல் உரைக்கிறது.

### தமிழ்க்காப்புஇயம்

தொல்காப்பியம் குறிப்பிடும் எழுத்துச் சாரியைகளையே தமிழ்க்காப்பு இயமும்,

**"மெய்கள் அகரமும் நெட்டுயிர் காரமும்
ஐ ஔக் கானும் இருமைக் குறிலிவ்
இரண்டொடு கரமுமாம் சாரியை பெறும்
பிற"[28]**
என்று வாங்கி மொழிகிறது.

இலக்கணவியலாரும் உரையாசிரியர்களும் கரம், காரம், கான் முதலியனவும் ஆனம், ஏனம், ஓனம், கேனம் என்பனவும் எழுத்துத் துணையாக வரும் னா, வன்னா போன்றன வும் எழுத்துச்சாரியைகளாகும். என்கின்றனர். ங், ஞ் என்ற எழுத்துக்களொடு அனம் என்னும் சாரியை சேர்த்து ஙனம், ஞனம் என்று வழங்குதல் தற்கால வழக்காகும். இதனொடு சேர்த்துத் தொல்காப்பியம் எழுத்துப் பேறுகளாகக் கூறுகின்ற அ, உ, எ முதலியனவும் எழுத்துச்சாரியைகளாகக் கொள்ளலாம். இதனை "நன்னூல் உரையா சிரியர் மயிலைநாதர் அ, உ, எ, ஐ, கு, ன முதலியவற்றை எழுத்துச்சாரியையாகக் கொள்ளலாம் என்கிறார்"[29] என்ற சோ.நா. கந்தசாமி கூற்று அரண் செய்கிறது. எனவே மரபிலக்கணவியலார் சுட்டும் எழுத்துச் சாரியைகள் மட்டுமின்றி இலக்கண வரலாற்றில் மேலும் பல சாரியைகள் காலமாற்றத்தால் தோன்றி உள்ளன என்பதே இவ்ஆய்வின் நோக்காம்.

### சான்றெண்விளக்கம்

1. இளம்பூரணர் உரை, தொல், எழுத்து, புணரியல், நூ - 118.
2. Meenaskshisundaram.T.P.,Indian Linguistics, Vol II. P - 49.
3. சுவாமிநாத தேசிகர் இலக்கணக்கொத்து, நூ - 104.
4. தொல்காப்பியர், தொல், எழுத்து, புணரியல், நூ - 134.
5. தொல்காப்பியர்,தொல், எழுத்து, புணரியல், நூ - 135.
6. தொல்காப்பியர்,தொல், எழுத்து, புணரியல், நூ - 136.
7. தொல்காப்பியர்,தொல், எழுத்து, புணரியல், நூ - 137.
8. தொல்காப்பியர்,தொல், எழுத்து, புணரியல், நூ - 46.
9. சிவலிங்கனார்.ஆ., தொல், எழுத்து, உரைவளம்,புணரியல், ப - 122.
10. சிவலிங்கனார்.ஆ., தொல், எழுத்து,

உரைவளம்,புணரியல், ப - 122.
11. சிவலிங்கனார்.ஆ., தொல், எழுத்து, உரைவளம்,புணரியல், ப - 122.
12. பிங்கல முனிவர், பிங்கலநிகண்டு, மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை, ப - 66.
13. பாலசுந்தரம்.ச., தொல், எழுத்து, ஆராய்ச்சிக் காண்டிகை உரை, ப - 169.
14. பவணந்தியார், நன்னூல், எழுத்து, நூ- 125.
15. சங்கரநமச்சிவாயர் உரை., நன்னூல், எழுத்து, நூ - 125.
16. மோசசு.பொன்னையா., நன்னூல் ஆராய்ச்சித் தெளிவுரை, ப - 104.
17. பாலசுந்தரம்.ச., நன்னூல் திறனாய்வு,ப-58.
18. பாலசுந்தரம்.ச., தென்னூல், எழுத்து, நூ- 180.
19. பாலசுந்தரம்.ச., தென்னூல், எழுத்து, உரைநூற்பா, நூ - 180.
20. வைத்தியநாத தேசிகர்., இலக்கணவிளக்கம், எழுத்து, நூ - 37.
21. முத்துவீர உபாத்தியாயர்., முத்துவீரியம், எழுத்து, நூ - 109.
22. முத்துவீர உபாத்தியாயர்., முத்துவீரியம், எழுத்து, நூ - 110.
23. முத்துவீர உபாத்தியாயர்., முத்துவீரியம், எழுத்து, நூ - 111.
24. சுவாமிநாத தேசிகர்., சுவாமிநாதம், எழுத்து, நூ - 22.
25. தண்டபாணி சுவாமிகள்., ஏழாம் இலக்கணம், நூ - 113.
26. சரவணத்தமிழன்.த., தமிழ்நூல், எழுத்து, நூ - 22.
27. சரவணத்தமிழன்.த., தமிழ்நூல், எழுத்து, நூ - 23.
28. காசுமான்.மி., தமிழ்க்காப்புஇயம், எழுத்து, நூ - 58.
29. சோ.நா.கந்தசாமி., இலக்கணச் சிந்தனைகள் (கட்டுரை - எழுத்துப்பேறும் சாரியையும்), ப - 37.

**துணைநூற்பட்டியல்**

1. கந்தசாமி. சோ.நா., இலக்கணச் சிந்தனைகள், அண்ணாமலை நகர், பதிப்பு – 1973.
2. காசுமான்.மி. புலவர், தமிழ்க்காப்பு இயம், காசுமான் பதிப்பகம், மார்த்தாண்டம்-629 165, பதிப்பு-ஆகஸ்டு 2005.
3. குணவீரபண்டிதர், நேமிநாதம், கழகப்பதிப்பு, சென்னை, பதிப்பு -1945.
4. சங்கர நமச்சிவாயர் , நன்னூல் மூலமும் சங்கரநமச்சிவாயர் உரையும், ப.ஆ. மஹாமஹோபாத்தியாய வே.சாமிநாத ஐயர், கமர்ஷியல் அச்சுக்கூடம், பதிப்பு- 1925.
5. சரவணத்தமிழன். த, தமிழ் நூல் (தமிணூல்), பாவும் உரையும், தமிழன் பதிப்பகம், கொளு:- இயற்றமிழ் பதிப்பகம், திருவாரூர்.
6. சிவலிங்கனார். ஆ., தொல்காப்பியம், எழுத்ததிகாரம், உரைவளம் - புணரியல், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை - 113, பதிப்பு - 1982.
7. சுவாமிநாத கவிராயர், சுவாமிநாதம், அண்ணாமலைப்பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், பதிப்பு-1975.
8. தொல்காப்பியன், தொல்காப்பியம், கழகப்பதிப்பு, சென்னை, பதிப்பு-1967.
9. பவணந்தி முனிவர், நன்னூல் மூலமும் விருத்தியுரையும், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை. பதிப்பு - 1999.
10. பாலசுந்தரம்.சு. பாவலரேறு தென்னூல், எழுத்துப்படலம் - சொற்படலம் தாமரை வெளியீட்டகம், தஞ்சாவூர்-613 009, பதிப்பு – நவம்பர் 1991.
11. பாலசுந்தரனார், சு. பாவலரேறு., நன்னூல் திறனாய்வுரை, தாமரை வெளியீட்டகம், தஞ்சாவூர் – 613 009, பதிப்பு – நவம்பர் 2003.
12. பிங்கல முனிவர், பிங்கல நிகண்டு, மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை, பதிப்பு – 1917.
13. புத்தமித்தரனார், வீரசோழியம், பெருந்தேவனார் உரையுடன், கழக வெளியீடு, சென்னை, பதிப்பு-1970.
14. பொன்னையா. மோசசு, நன்னூல் ஆராய்ச்சித் தெளிவுரை, சொல்லதிகாரம், அருள்நகர் பதிப்பகம், மதுரை, பதிப்பு - 1971.
15. முத்துவீர உபாத்தியாயர், முத்துவீரியம், கழகவெளியீடு, சென்னை, சுந்தரமூர்த்தி - கு பதிப்பு, பதிப்பு-1972.
16. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், ஏழாம் இலக்கணம், இளமாறன்.வி.அருள் பதிப்பு, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்-608 001, பதிப்பு-டிசம்பர்2008.
17. வீரமாமுனிவர், தொன்னூல் விளக்கம், தமிழ்ப்பதிப்பகம், அடையாறு, சென்னை -600 020, பதிப்பு - 1978.
18. வைத்தியநாததேசிகர், இலக்கணவிளக்கம், சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, பதிப்பு -1973.
19. Meenaskshisundaram.T.P., The So-Called Inflexional Increments in Tamil, Indian Linguistics Vol-ll, Annamalai University, Annamalai Nagar, 1959.